செ.வெ.எண்.299 நாள்.07.05.2018.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் இடையன்குடியில் தமிழறிஞர் பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் 204வது பிறந்த நாளினை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

---

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் இடையன்குடியில் உள்ள தமிழறிஞர் பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் நினைவு இல்லத்தில் 204வது பிறந்த நாளினை முன்னிட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாலை அணிவித்து மாரியாதை செலுத்தும் நிகழ்ச்சி இன்று (07.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., அவர்கள், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோர் கலந்து கொண்டு, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

1814–ம் ஆண்டு மே மாதம் 7–ம் தேதி, அயர்லாந்து நாட்டில் பேராயர் இராபர்ட் கால்டுவெல் பிறந்தார். 1837–ம் ஆண்டு ஆகஸ்ட் 30–ம் நாள் கப்பலேறி நான்கு மாத பயணத்தில் தெலுங்கும், சமஸ்கிருதமும் கற்று, 1839–ம் ஆண்டு ஜனவரி 8–ம் நாள் சென்னை வந்து சேர்ந்தார். தமிழுக்கு தொண்டாற்றி ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல் அவர்கள் “ Probagation of the Gospel ” என்ற நற்செய்தி பரப்பு சங்கம் சார்பாக, வாட்டும் வெயிலிலும், நூற்றுக்கணக்கான மைல்களை கால்நடையாகவே கடந்து 1841–ல் இடையன்குடி வந்து சேர்ந்தார்.

1856–ல் “ A Comparative Grammar of the Dravidian of South Indian Family of Language ” எனப்படும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலினை இயற்றினார். கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் இளங்கலை பட்டமும், தத்துவம், இலத்தீன் மற்றும் எபிரேயம் ஆகிய மொழிகளில் சிறப்பு தேர்ச்சியும் பெற்றார். கிரேக்க மொழி கற்பித்த பேராசிரியர் சர். டேனியல் சான்ஃபர்ட் அவர்களால் மொழி ஆராய்ச்சியில் மிகுந்த ஆர்வம் பெற்றார். 1877–ம் ஆண்டு கல்கத்தாவில் பேராயராக அருட்பொழிவு பெற்றார். 1881–ல் நெல்லை மாவட்ட வரலாற்றினை எழுதினார். இவை யாவும் பேராயர் கால்டுவெல் அவர்களின் ஆற்றலுக்கும் பெருமைக்கும் அழியாத சின்னங்களாக திகழ்கின்றது. 1891–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ம் நாள் பேராயர் கால்டுவெல் கொடைக்கானலில் மரணமடைந்தார். அவரது உடல் இடையன்குடிக்கு கொண்டுவரப்பட்டு அவரால் கட்டப்பட்ட கோவிலிலேயே அடக்கம் செய்யப்பட்டது. இங்குள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மாரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.ஜெயஅருள்பதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.வெ.சீனிவாசன், இராதாபுரம் வட்டாட்சியர் திரு.முகமதுபுகாரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஸ்ரீநிவாச சுடலைமுத்து, திருமதி.பிளாரன்ஸ் விமலா, சர்ச் செயலளார் திரு.ஜெயகரன், முக்கிய பிரமுகர்கள் திரு.முருகேசன், திரு.ஜெயக்குமார், திரு.சுடலைமணி, திரு.தவசிமுத்து, மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.